**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 63/2025 |
| Deposition of Witness | : | PW– 1 |
| Name | : | கார்த்திக் |
| Father Name | : | முத்துச்சாமி |
| Village | : | சிவலிங்கபுரம் |
| Taluk | : | கொடுமுடி |
| Age | : | 39 |

Accused present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 17.07.2026

**முதல் விசாரணை**

நான் தற்போது சிவலிங்கபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் ஆக்டிங் டிரைவராக உள்ளேன். கடந்த 30.11.2024 ஆம் தேதியன்று நானும், எனது அக்கா வீட்டுக்காரர் மச்சான் சுப்பிரமணி என்பவரும் எனது இருசக்கர வாகனத்திலும், எனது அப்பா முத்துச்சாமி அவரது TN 33 BM 9338 என்ற பதிவு எண் கொண்ட XL 100 இருசக்கரவாகனத்தில் குழதெய்வ கோவிலுக்கு செல்லவேண்டி முத்தூர் – ஈரோடு ரோட்டில் சென்றுகொண்டிருந்தபோது முத்தூர் வேலாயுதம்பாளையம் அருகே எனது அப்பா முன்னால் செல்ல நான் அவருக்கு பின்னால் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி சென்று கொண்டிருந்தபோது எங்களுக்கு பின்னால் வந்த TN 39 N 0338 என்ற பதிவு எண் கொண்ட அரசு பேருந்து எங்களை ஓவர் டேக் செய்து வேகமாக சென்று எனது அப்பாவின் வாகனத்தின் மீது பேருந்தின் இடது பக்க மோதி விபத்து ஏற்பட்டுவிட்டது. எனது அப்பா வண்டியுடன் கீழே விழுந்துவிட்டார். நானும், எனது மச்சானும் சென்று பார்த்தபோது வலதுபுற கண், தலை, நெஞ்சு பகுதியில் பலத்த காயம் ஏற்பட்டு இரத்தம் வந்தது. பின்னர் தனியார் ஆம்புலன்ஸ் மூலம் காங்கேயம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்று முதலுதவி சிகிச்சை அளித்துவிட்டு பின்னர் மேல் சிகிச்சைக்காக ஈரோடு கேஎம்சிகெச் மருத்துவமனைக்கு அழைத்துச்சென்று சிகிச்சையில் சேர்த்தேன்.

அங்கு 15 நாட்கள் சிகிச்சை பெற்ற பின்னர் பெருந்துரை அரசுமருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சை பெற்று வந்த எனது அப்பா சிகிச்சை பலனின்றி 19.12.2024 ஆம் தேதியன்று இறந்துவிட்டார். பின்னர் விபத்து நடந்த மறுநாள் வெள்ளகோவில் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எனது அப்பாவின் பிரேதத்தின் மீது போலீசார் பிரேத விசாரணை செய்தபோது சாட்சியாக உடனிருந்தேன். ஆஜர் எதிரிதான் எனது அப்பாவின் மீது மோதி விபத்து ஏற்படுத்திய அரசு பேருந்தின் ஓட்டுநர் ஆவார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**குறுக்கு விசாரணை**</u>

எனது அப்பாவிற்கு வயது 67 இருக்கும் என்றால் சரிதான். சம்பவ சமயம் மழை பெய்து கொண்டிருந்தது என்றால் சரியல்ல. எனது அப்பாவிற்கு எனக்கு எவ்வளவு இடைவெளியில் பயணம் செய்து கொண்டிருந்தோம் என்றால் சுமார் 50 மீ இடைவெளியில் பயணம் செய்து கொண்டிருந்தோம். நான் எனது இருசக்கர வாகனமான பேஷன் பிரோ பைக்கில் சென்றேன். மேற்படி விபரத்தை நான் புகாரிலும், போலீசார் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். சுப்பிரமணி, தங்கமணி எனது உறவினர்கள் என்றால் சுப்பிரமணி எனது உறவினர் ஆவார். தங்கமணி சம்பவ இடத்தின் அருகில் வசிப்பவர் ஆவார். பேருந்தானது வடக்கில் இருந்து தெற்கு நோக்கி வந்தது என்றால் சரிதான். பேருந்தின் பின் படிக்கட்டு பகுதியில் இருசக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டுவிட்டது என்றால் சரிதான். எனது அப்பாவின் இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கான ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். எனது அப்பாவின் பின்னால் செல்லவில்லை என்றும் எனது அப்பாதான் உரிய ஓட்டுநர் உரிமம் இல்லாமல் இருசக்கர வாகனத்தை கவனக்குறைவாக இயக்கி அரசு பஸ்ஸின் பின்புற படிக்கட்டில் மோதி விபத்தை வலிய ஏற்படுத்திக்கொண்டார் என்றால்

சரியல்ல. விபத்து நஷ்ட ஈடு பெறவேண்டி பொய் புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2026.07.17 15:00:43 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 63/2025 |
| Deposition of Witness | : | PW– 2 |
| Name | : | சுப்பிரமணி |
| Father Name | : | நாச்சிமுத்து |
| Village | : | சத்தரம்வீதி, காங்கேயம் |
| Taluk | : | காங்கேயம் |
| Age | : | 56 |

Accused Present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 17.07.2026

**முதல் விசாரணை**

நான் தற்போது காங்கேயத்தில் குடியிருந்து வருகிறேன். நான் சலூண் கடை வைத்து நடத்தி வருகிறேன். கடந்த 30.11.2024 ஆம் தேதியன்று நானும், எனது மைத்துனனும் அவரது இருசக்கர வாகனத்திலும், எனது மாமனார் முத்துச்சாமி அவரது TN 33 BM 9338 என்ற பதிவு எண் கொண்ட XL 100 இருசக்கரவாகனத்தில் குழதெய்வ கோவிலுக்கு செல்லவேண்டி முத்தூர் – ஈரோடு ரோட்டில் சென்றுகொண்டிருந்தபோது முத்தூர் வேலாயுதம்பாளையம் அருகே எனது மாமனார் முன்னால் செல்ல நாங்கள் அவருக்கு பின்னால் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி சென்று கொண்டிருந்தபோது எங்களுக்கு பின்னால் வந்த TN 39 N 0338 என்ற பதிவு எண் கொண்ட அரசு பேருந்து எங்களை ஓவர் டேக் செய்து வேகமாக சென்று எனது மாமனாரின் வாகனத்தின் மீது பேருந்தின் இடது பக்க மோதி விபத்து ஏற்பட்டுவிட்டது. எனது மாமனார் வண்டியுடன் கீழே விழுந்துவிட்டார். நானும், எனது மைத்துனனும் சென்று பார்த்தபோது வலதுபுற கண், தலை, நெஞ்சு பகுதியில் பலத்த காயம் ஏற்பட்டு இரத்தம் வந்தது. பின்னர் தனியார் ஆம்புலன்ஸ் மூலம் காங்கேயம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்று முதலுதவி சிகிச்சை அளித்துவிட்டு பின்னர் மேல் சிகிச்சைக்காக ஈரோடு கேஎம்சிஹெச் மருத்துவமனைக்கு அழைத்துச்சென்று சிகிச்சையில் சேர்த்தோம். அங்கு 15 நாட்கள் சிகிச்சை பெற்ற பின்னர் பெருந்துரை அரசுமருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சை பெற்று வந்த எனது மாமனார் சிகிச்சை பலனின்றி 19.12.2024 ஆம்

தேதியன்று இறந்துவிட்டார். எனது மாமனாரின் பிரேதத்தின் மீது போலீசார் பிரேத விசாரணை செய்தபோது சாட்சியாக உடனிருந்தேன். ஆஜர் எதிரிதான் எனது மாமாவின் மீது மோதி விபத்து ஏற்படுத்திய அரசு பேருந்தின் ஓட்டுநர் ஆவார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

## குறுக்கு விசாரணை

சம்பவ சமயம் மழை பெய்து கொண்டிருந்தது என்றால் சரியல்ல. எனது மாமாவிற்கு எனக்கு எவ்வளவு இடைவெளியில் பயணம் செய்து கொண்டிருந்தோம் என்றால் சுமார் 100 மீ இடைவெளியில் பயணம் செய்து கொண்டிருந்தோம். நாங்கள் இருசக்கர வாகனமான ஹோண்டா சைனில் சென்றோம். மேற்படி விபரத்தை நான் புகாரிலும், போலீசார் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சுப்பிரமணி, தங்கமணி எனது உறவினர்கள் என்றால் சுப்பிரமணி எனது உறவினர் ஆவார். தங்கமணி சம்பவ இடத்தின் அருகில் வசிப்பவர் ஆவார். பேருந்தானது வடக்கில் இருந்து தெற்கு நோக்கி வந்தது என்றால் சரிதான். பேருந்தின் பின் படிக்கட்டு பகுதியில் இருசக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டுவிட்டது என்றால் சரிதான். எனது மாமனார்தான் இருசக்கர வாகனத்தை கவனக்குறைவாக இயக்கி அரசு பஸ்ஸின் பின்புற படிக்கட்டில் மோதி விபத்தை வலிய ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. விபத்து நஷ்ட ஈடு பெறவேண்டி கொடுக்கப்பட்ட பொய் புகாருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2026.07.17 15:01:03 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM**

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 63/2025 |
| Deposition of Witness | : | PW– 3 |
| Name | : | மூர்த்தி |
| Father Name | : | மணி |
| Village | : | சிவலிங்கபுரம் |
| Taluk | : | காங்கேயம் |
| Age | : | 56 |

Accused Present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 17.07.2026

**முதல் விசாரணை**

நான் தற்போது சிவலிங்கபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் தறி வலை செய்து வருகிறேன். கடந்த 01.12.2024 ஆம் தேதியன்று மாலை 4.00 மணியளவில் முத்தூர் – ஈரோடு ரோடு வேலாயுதம்பாளையம் அருகே தங்கமணி என்பவரி வீட்டின் முன்பாக போலீசார் விபத்து நடந்த சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அதில் சாட்சியாக இருக்கும்படி கேட்டார்கள். அதில் நானும் என்னுடன் குப்புசாமி என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். **அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

அ.சா.1 எனது உறவினர் ஆவார். நான் சம்பவ இடத்திற்கு எதற்காக சென்றேன் என்றால் சொந்த வேலையாக சென்றேன். நான் சம்பவ இடம் சென்று பார்க்கும்போது இருசக்கர வாகனம் அங்கேயே இருந்தது. நான் போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க காவல் நிலையத்தில் வைத்து

கையொப்பம் செய்துவிட்டு தற்போது சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2026.07.17 15:01:12 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 63/2025 |
| Deposition of Witness | : | PW– 4 |
| Name | : | மகேந்திரன் |
| Father Name | : | துரைசாமி |
| Village | : | அரச்சலூர் |
| Taluk | : | காங்கேயம் |
| Age | : | 53 |

Accused Present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 17.07.2026

**முதல் விசாரணை**

நான் தற்போது காங்கேயத்தில் குடியிருந்து வருகிறேன். நான் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கலகத்தில் நடத்துனராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 30.11.2024 ஆம் தேதியன்று TN 39 N 0338 என்ற பதிவு எண் கொண்ட அரசு பேருந்தில் நான் நடத்துனராகவும், ஆஜர் எதிரி முருகேஷன் ஓட்டுநராகவும் முத்தூர் – ஈரோடு ரோட்டில் சென்றுகொண்டிருந்தபோது முத்தூர் வேலாயுதம்பாளையம் அருகே பேருந்தின் பின்பக்க படிக்கட்டின் பின்பகுதியில் இருசக்கர வாகனத்தின் சைடு கண்ணாடி மோதி விபத்து ஏற்பட்டு இருசக்கர வாகனத்தில் வந்தவர் கீழே விழுந்துவிட்டார். பேருந்தை நிறுத்தி அவரை ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தோம். சம்பவத்தின்போது ஆஜர் எதிரிதான் விபத்தை ஏற்படுத்திய வாகனத்தின் ஓட்டுநர் ஆவார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

சம்பவ சமயம் மழை பெய்து கொண்டிருந்தது என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தில் வந்தவர் தனியாகத்தான் வந்தார் என்றால் சரிதான். அவர் கூடவோ, அவருக்கு பின்னாடியோ யாரும் வரவில்லை என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தில் வந்தவரின் சைடு கண்ணாடிதான் பேருந்தின் பின்பக்கத்தில் மோதி

விபத்து ஏற்பட்டுவிட்டது என்றால் சரிதான். இவ்விபத்திற்கு இறந்தவரின் அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவுதான் காரணம் என்றால் சரிதான். பின்னர் நானும், ஓட்டுநரும் காயம் பட்ட நபரை ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தோம் என்றால் சரிதான். நாங்கள் மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கும் வரை அவரது உறவினர்கள் யாரும் சம்பவ இடத்திற்கு வரவில்லை என்றால் சரிதான். இறந்துபோனவர்தான் உரிய ஓட்டுநர் உரிமம் இல்லாமல் இருசக்கர வாகனத்தை கவனக்குறைவாக இயக்கி வலிய விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. விபத்து நஷ்ட ஈடு பெறவேண்டி கொடுக்கப்பட்ட பொய் புகாருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2026.07.17 15:01:29 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்